Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிவாகமம் கூறும் நடனக்கணிகையரின் முக்கியத்துவமும் தற்காலநிலையும்

15

**சீதாலஷ்மி பிரபாகரன் & முனைவர். மா.சுப.சரளா**
**நடனத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
prabhahrn@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம்:**

சைவத்திற்கு அடிப்படை நூல்களாக விளங்குபவை சிவாகமங்களே. இச்சிவாகமங்கள் சைவாலய வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைவன. சைவத்தின் கலைக்களஞ்சியமாக விளங்கும் சிவாகமங்கள் ஆலயஅமைப்பு, வழிபாட்டு முறை, திருவுருவம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், தத்துவம் முதலான பல அம்சங்களை அடிப்படையாக கொண்டமைந்துள்ளன. இவ்வாறான சிவாகமங்கள் இறை வழிபாட்டிற்கு மட்டுமன்றி அறுபத்திநான்கு கலைகளை வளர்க்கும் ஒர் நூலகமாகவும் விளங்குகின்றன. அவ்வகையில் உலகளாவிய ரீதியில் காணப்படும் நடனக்கலை அரங்கக்கலையாக பரிணமிக்கும் முன்னர் இறைவன் வீற்றிருக்கும் ஆலயங்களில் உயிர்த்தது எனலாம். அந்தவகையில் நடனக்கலையை இறைவழிபாட்டுடன் இணைத்து புனிதமாக்கி வளர்த்து வந்தவர்கள் நடனக்கணிகையர்கள். இவர்கள் தமது கலைச்சேவைகளை சிவாகமங்கள் சுட்டியது போன்று ஆற்றுகைப் படுத்தினார்களா எனவும் அதற்குரிய பாத்திர லட்சணங்களுடன் இருந்தார்களா எனவும் நோக்குவதாக, இவ்வாய்வு அமைவுறும். இவ்வாய்வு ஆலயத்தையும், நடனக்கணிகையரையும் மையமாகக் கொண்டு அமைந்ததால் காரணாகமம், காமிகாகமம் மற்றும் நாட்டிய சாஸ்திரத்தை மூலமாகவும், அதன்வழி நூல்களையும் ஆதாரமாகக் கொண்டும் ஆராயப்படும். இந்நடனக்கலை ஆலயங்களில் இருந்த தன்மையை அறிய வரலாற்றாய்வாகவும், களஆய்வாகவும், நடனகணிகையரின் லÑணங்களை நோக்கும் முகமாக விபரண ஆய்வாகவும் காணப்படும். சிவாகமங்கள் கூறியதற்கு அமைவாக அதற்குரிய முறையில் தற்காலத்தில் ஆற்றுகைப்படுத்துவதற்கு உரிய வழிவகைகளை கண்டறிதல் அவசியம். அதற்கு தற்கால நடனக்கலைஞர் எவ்வகையில் முனைப்புடன் செயற்படலாம் என நோக்குவதாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** சிவாகமம், நடனம், ருத்திரகணிகையர்.

**ஆய்வு அறிமுகம்:**

சிவாகமங்கள் சிவனை மையமாகக் கொண்டு எழுந்தன. சைவாலயங்கள் சார்ந்த

விடயங்களை விதி நூல்களாகவும், விதித்துக் கூறுவதை மையமாகக் கொண்டும் இவை விளங்குகின்றன. சிவாகமம் என்பது சமஸ்கிருத மொழிச் சொல். இச்சிவாகமங்கள் இருவகைப்படுவன. மூல சிவாகமங்கள், உபாகமங்கள் என்பதாம். மூலசிவாகமங்கள் இருபத்தெட்டும், உபாகமங்கள் இருநூற்றேழும் ஆகும். இவ்வாறான சிவாகமங்கள் சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை, இசைக்கலை, சோதிடக்கலை முதலான பல்கலை பற்றியும் கூறிநிற்கின்றன. சிவாகமங்களில் கூறப்படாத துறையோ, கலையோ எதுவும் இல்லை. ”சிவாகமங்கள் சாரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என நான்கு நிலைகளைக் கூறுகின்றன.” காமிகாகமமும், காரணாகமமும் கிரியாபாதத்தையே கூறுவன. ”கிரியை மூன்று பேதங்களைக் கொண்டது. அவை நித்தியம், நைமித்திகம், காமிகம் ஆகும்” கிரியை எனும் கலையையே மையமாகக் கொண்டு சிவாகமங்கள் சிறப்புறுகின்றன. ”கிரியைகள் இருவகைப்படும். ஆன்மார்த்தம், பரார்த்தம். தனக்கும் தன்னைச் சார்ந்தவர்க்கும் நன்மை அளிக்கும்படி வீட்டில் செய்யும் கிரியை ஆன்மார்த்தம் எனவும், கிராமத்திலோ நகரத்திலோ உள்ளவர்களின் நலன் கருதி பிரதிஷ்டிக்கபட்ட தெய்வ மூர்த்தங்களை வழிபட்டு ஆலயங்களில் செய்யப்படும் கிரியை பரார்த்தம் எனச் சொல்லப்படும்.” ஆலயங்களில் இடம் பெறும் கிரியைகளின் முறைகள் பற்றியும் அங்கு ஜபிக்கும் மந்திரங்கள், ஸ்லோகங்கள், தியானங்கள் என்பன பத்ததிகளில் காணப்படும். இதில் நித்திய, நைமித்திய, காமிய வழிபாட்டு விதிமுறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதில் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், ஆசீர்வாதம், நாட்டியம் என்பன நிகழ்த்தப்பட வேண்டும் என்பது பொது விதியாகும்.

ஆலயங்களில் ஆகம வழிபாட்டு நெறிக்கமைய பூஜை வேளைகளின் போது நடனக்கணிகையர் ஆற்றிய கலைப்பணி அளப்பெரியது. அந்த வகையில் ஆலயக் கிரியைகளில் இறைவனுக்கு வழங்கும் 64 உபசாரங்களில் கீதம், வாத்தியம், நிருத்தம் முதலியன சமர்ப்பித்தல் அவசியம் என்பதை பூஜா பத்ததிகள் மூலம் அறிய முடிகின்றது. இப்புனிதமான கலை ஆராதனையை தொன்றுதொட்டு ஆலயங்களில் வழங்கி வந்தவர்கள் நடனக் கணிகையர்.

இவர்கள் ” பதினாறு வகை உபசாரத்தின் போது சந்நிதானத்தின் முன் நின்று ஒவ்வொன்றிற்கேற்ப தம் கைகளால் முத்திரை காட்டி அபிநயிப்பார்கள். இவ்வாறு செய்யப்படும் முறைக்கு ”கை காட்டு முறை” என்று பெயர். இவர்கள் ஆற்றிய அளப்பெரிய இக்கலைப்பணி தற்காலத்தில் ஆலய கிரியைகளில் குறிப்பாக நடனக்கலை வழக்கொழிந்து போய்விட்டது எனக் கூறலாம். இந்நிலைக்கான காரணத்தை ஆராய்வது அவசியமாகும். இக்கலைப்பணியை பூஜை வழிபாட்டின் போது ஆகமங்கள் கூறியதற்கு அமைவாக அதற்குரிய முறையில் எவ்வாறு பின்பற்றினர் என்பதை ஆராய்வதும் அவசியம். கலைகள் வளர்ச்சியடைய ஒர் சான்றாக அமைந்தது ஆலயங்கள் என்பதை மையமாகக் கொண்டும், அதிலும் நடனக்கலையை ஆற்றுகைப்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

படுத்துபவர்கள் அதற்கான பாத்திர லக்ஷணங்களுடன் ஆலய வழிபாட்டு முறைகளில் நிகழ்த்தப்பட்டதா என நோக்கியும் இவ்வாய்வு நகர்கின்றது.

**ஆலயங்களில் நடனக்கணிகையர்:**

ஆலயங்களில் ஆகமங்களின் அடிப்படையில் வழிபாட்டு முறைகள் தோன்றிய பின்னரே நடனக்கணிகையரின் தேவை அதிகரிக்கப் படுகிறது. காமிகாகமம் சக்திகளை "இச்சை, ஞானம், கிரியை என மூன்றாக வகுத்துள்ளது. இதில் இச்சாசக்தியின் பாதநூபுர சப்தத்தில் இருந்து ருத்திரகணிகை உண்டானாள். கிரியா சக்தியின் நூபுர சப்தத்தினின்று ருத்திரகன்னிகையும், ஞானசக்தியின் நூபுர சப்தத்தில் ருத்திரதாஸியும் உண்டானாள். இம்மூவரும் சுபகரமான லட்சணத்தோடு கூடியிருத்தல் வேண்டும்." இறைவனுக்கு தொண்டு செய்யும் பெண்களான, நடனகணிகையரை பண்மகள், பாடினி, மாதங்கி என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. இவர்களை தேவரடியார், தேவதாஸிகள், கூத்திகள், ருத்திரகணிகையர். ரிஷபத்தளியிலார், தளிச்சேரிப் பெண்டுகள், தலைக்கோலி, நக்கன், பதியிலார், மாணிக்கத்தார் என காரணப்பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டனர்.

"கி.பி 550 முதல் கி.பி 1947 வரை தமிழகக் கோயில்களில் இறைவனுக்குச் சேவை செய்வதற்காக தேவதாசிகள் என்றொரு தனி இனமே அக்காலத்தில் உருவாக்கப்பட்டது." இதில் "தேவர் + அடி+ ஆள் -தேவரடியாள். அதாவது தேவர்களுக்கு தொண்டு செய்பவள் என்று பொருள்" தேவரடியாளின் சமஸ்கிருத சொல்லே தேவதாஸி. "தேவ+தாசி,கோவில் பணிவிடை புரியும் கணிகை, தேவலோகத்து நாடக அரம்பையர் என்கிறது தமிழ் லெக்சிகன். " இவர்களை பல்லவர் கால கல்வெட்டுக்கள் கூத்திகள் என்கிறது. கூத்து என்கின்ற வேர் சொல்லில் இருந்து தோன்றியது. ஆகமங்கள் நடனப் பெண்களை ருத்ரகணிகையர் என்கிறது. ருத்ரன் என்பவர் சிவன் . ருத்திரனுக்கு சேவை செய்தவர்கள் ருத்ரகணிகையர்.

சிவனுக்கு மட்டும் சேவை செய்வதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் 'ரிஷபத் தளியிலார்' அல்லது 'இடபத்தளியிலார்' என அழைக்கப்பட்டனர். ரிஷபம் அல்லது இடபம் சின்னம் பொறிக்கப் பட்டவர்கள். அவர்கள் சிவனுக்கு நேர்ந்து விடப்பட்டபெண்கள், 'திருநாமத்தடியார்' என்றும் அழைக்கப் படுகின்றனர். "தளிசேரிப் பெண்டிர் கோவில் சார்ந்த குடியிருப்பில் வாழ்கின்ற பெண்கள் எனப் பொருள்படும். இவர்கள் கோவில்களின் சிறப்பு விழாக்களில் ஆடல் நிகழத்தியவர்கள் ஆவர்" பதியளிலார், தளியிலார், தளிசேரிப் பெண்டுகள் ஆகியோர் நடனகணிகையரின் மேம்பட்டநிலையில் உள்ளவர்கள் ஆவர்.

பல்லவர், பாண்டியர், சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் சிவாலயங்களின் நடனப் பெண்களே மாணிக்கத்தார் எனக் கூறுகின்றன. "கி.பி 1250 ஆம் ஆண்டு சிலாசனம் ஒன்று எல்லாத் தேவரடியார் பெண்களையும் மாணிக்கத்தார் என்கின்றது." இவ்வாறு ஆலயங்களில் நித்திய, நைமித்திய கிரியைகளின் போது நடனம் புரிந்தவர்களை காலத்தின்

அடிப்படையில் பல்வேறு பெயர்கள் கொண்டு அழைத்து வந்துள்ளனர்.

**நடன கணிகையரின் லட்சணங்கள்:**

சிவாகமங்கள் நடன கணிகையரின் பாத்திர லட்சணங்களை பற்றியும் இவர்களுக்கான ஒப்பனை பற்றியும் விளக்கியுள்ளன. இதில் ருத்திரகணிகை ஏழுயதிற்குட்பட்டவளாயும், ருத்திரகன்னிகை எட்டு வயதிற்குட்பட்டவளாயும், ருத்திரதாஸி ஒன்பது வயதிற்குட்பட்டவளாயும் இருத்தல் வேண்டும் எனவும் காமிகாகமம் சுட்டுகின்றது. இவர்களது ஒப்பனையில் ஆடை, அணிகலன்கள், முகஅலங்காரங்கள் பற்றியும் காமிகாகமம் விரிவாக விளக்கியுள்ளது. ”இவர்கள் வண்டின் நிறம் போன்ற மயிரோடு கூடியவளாய், சிரசு சமவிருத்தமாயும்., அஷ்டமி சந்திரனுக்கு சமானமாய் நெற்றியில் சூர்ணகுந்தலத்தோடு கூடியவளாயும், மன்மதன் வில்லைப்போன்ற புருவம் உடையவளாயும் நீலோத்பலம் போன்ற கண்ணை உடையவளாயும், செண்பக புஷ்பம் போன்ற அதாவது கிளிக்கு ஒப்பான மூக்கை ஒத்தவளாயும் இருத்தல் வேண்டும் என்கிறது. இவற்றுடன் கர்ணசந்திரமுடையவளாயும், பவழம் போன்ற அதரங்களையும், முல்லைப்பு+ போன்ற பற்களையும், சங்கு போன்ற கழுத்தையும் கொண்டவளாகவும் இருத்தல் வேண்டும்” எனச் சொல்லப்படுகிறது. இவற்றைப் போன்றே நடனக்கணிகை அமைப்புப் பொருந்தியவளாக இருக்க வேண்டும் என்பதையும் இவற்றுடன் சர்வாபரண பூஷிதியாயும், இறைவனிடத்தில் பக்தியுடையவளாயும் இருத்தல் வேண்டும் என காமிகாகமம் ஆசார்ய லட்சணபடலம் தந்துள்ளது.

இவ்வாறு சிறப்புப் பொருந்திய நடனக்கணிகை ஆலயத்தில் மஹாமண்டபம் முதல் கற்பக்கிரஹம் வரை கூட்டுதலும், மெழுகுதலும், பஞ்ச சூர்ணங்களினால் அலங்காரம் செய்தும் சுத்தமாக இருந்து தீபாராதனை காலத்தில் சுத்தநிருத்தம் செய்தல் வேண்டும் எனப்படுகிறது. ”பூர்ணகும்பத்தை ஈசான கலையோடும் கூடிய தீபத்தை ருத்ரகணிகையின் ஹஸ்தத்தை சிவஹஸ்தமாக்கி இவளின் கையில் கொடுத்து அந்த இடத்தில் ஸ்தோத்திர கானங்களை செய்து, ஆராதித்து பின் சிவாசாரியார் மந்திரத்தால் ஜெபிக்கப்பட்ட நீரை கொண்டு ருத்ரகணிகையின் கையில் உள்ள கும்ப ஆராத்தியை விஸர்ஜனம் செய்தல் வேண்டும்.” அதாவது இறைசக்தி ஆக்குதல் வேண்டும். இவற்றுடன் பதினாறு வகையான உபசாரங்களினால் இறைவனை ஆராதித்து, பின் எல்லாத் தீபங்களையும் பு+ர்ணகும்பத்தில் மந்திரத்தால் ஆவாஹனம் செய்தல் வேண்டும். பூர்ணகும்பம் எல்லாத் தீபங்களுக்கும் இருப்பிடமாகும். ”சக்தி ஸ்வரூபமான ருத்திரகணிகை இரண்டு கரங்களினாலே லிங்க லயம் செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் பூஜை நஷ்டத்தையும், ராஜராஷ்டிரம், நாசத்தையும் அடையும், பூஜா லோபமும் உண்டாகும்.” (அதாவது ருத்திரகணிகை லிங்கமுத்திரை பிடித்தல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் பூஜையில் குறையும், அரசாட்சிக்கு தீங்கும் ஏற்படும் என்கிறது.) இதன் பின் ருத்திர கணிகை சுத்த

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

நிருத்தம் செய்தல் வேண்டும். ”சிவலிங்கத்திற்கு முன்னால் சிவன் பார்வதி பேதங்களை உருவகித்து ஆடப்படும் நிருத்தம் சுத்த நிருத்தம் எனப்படும்.“ இது போன்று ருத்திரகன்னிகைக்கு மிச்ரநிருத்தமும், ருத்ரதாஸிக்கு கேவலநிருத்தமும் சொல்லப்பட்டுள்ளது. ருத்திரகன்னிகை நித்தியபூஜையின் போதும், உற்சவத்தில் சுவாமி புறப்பாட்டின் பொழுதும் மிச்ரநிருத்தம் செய்தல் வேண்டும். மஹாமண்டப பிரகாரத்தில் ருத்திரதாஸி கேவலநிருத்தம் செய்தல் வேண்டும். இவள் எல்லா உற்சவங்களிலும் நிருத்தம் செய்ய வேண்டும். இவர்கள் மூவரும் அந்தந்த வயதிற்குள் பொட்டுக்கட்டியே நிருத்தம் செய்தல் வேண்டும் என்பது நியதியாகும்.

**நிறைவுரை:**

ஆலயங்களில் இறைவனுக்குச் சேவையை செய்வதற்காக நேர்ந்து விடப்பட்ட பெண்கள் தான் நடனக் கணிகையர். ஆலய நடைமுறைகளை ஒழுங்கு செய்யும் வழிகாட்டி நூலாக காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருவது சிவாகமங்களே. இச்சிவாகமங்களை அடிப்படையாக வைத்து தான் இன்றுவரை அனேகமான ஆலயங்களில் வழிபாட்டு முறைகள் இடம்பெறுகின்றன. அந்த வகையில் நோக்குகின்ற போது இறைவனுக்குத் தூய்மையான இக் கலைபணிகளை செய்தற்கு தற்காலத்தில் நடனக் கணிகையர் அந்தந்த ஆலயங்களில் இல்லை. ஆனாலும் அனேகமான மக்கள் நடனக்கலையில் ஆர்வம் காட்டுவதுடன் தமது குழந்தைகளுக்கும் இக்கலையை போதிக்கின்றனர். அத்துடன் இக்கலையை நிகழ்த்துவதற்கு ஆலய சிவாசாரியார்களும். ஆலய நிர்வாக சபையினரும் ஒத்துழைக்க வேண்டும். ஆனாலும் ஒரு சில ஆலயங்களில் உற்சவ காலங்களில் நடனக்கலை நடைபெறுகின்றதை இட்டு பெருமை கொள்வோம். அந்தவகையில் ”இலங்கையில் திருகோணமலையில் தம்பலகாமம் எனும் ஊரில் சோழர் காலத்து ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தில், உற்சவகாலங்களில் கைகாட்டும் முறை இன்றும் நடைபெற்று வருகின்றது.” அத்துடன் ஒரு சில ஆலயங்களில் கும்பாபிஷேக நிகழ்வுகளில் நிருத்த உபசாரம் நடைபெறுகின்றது. அதற்கு பல ஆலய நிகழ்வுகள் சான்றாகும். நடனக்கலையை ஆற்றுகை செய்வதற்கு கலையை பயில்கின்றவர்கள் முன்வரவேண்டும். ஆலயங்களில் மறைந்து இருக்கும் இக்கலை ஆலயவழிபாட்டில் மீண்டும் வெளிக்கொண்டுவரும் ஒர் முயற்சியாக இவ்வாய்வு அமைகின்றது.

ஸ்ரீ கோபாலவிலாஸமுத்ராட்சரசாலை, கும்பகோணம், 1916. ப – ச.

[1]மேலது ப- ச.

[1]ஆலயகிரியைமரபில்ஸ்பர்சாகுதி, திருக்கோயிற்கிரியைமரபு, ஷஷ்டியப்தபூர்த்திவிழாவெளியீடு, ஜே.ஆர். அச்சகம், லண்டன், 2005. ப- 22.

[1]வெண்ணிலா.அ, தேவரடியார்கலையேவாழ்வாக.., அகநிவெளியீடு, மணிஆப்செட், சென்னை.2018 ப-45.

[1]சத்யோஜாதசிவாச்சாரியார், காமிகாகமம், மு.சு.நூல். ப-ருச.

[1]வெண்ணிலா.அ, தேவரடியார்கலையேவாழ்வாக.மு.சு.நூல். ப-33.

[1]மேலது ப-33.

[1]மேலது ப-34.

[1]மேலது ப-36.

[1]மேலது ப-35.

[1]சத்யோஜாதசிவாச்சாரியார், காமிகாகமம், மு.சு.நூல். ப-ருள.

[1]சத்யோஜாதசிவாச்சாரியார், காமிகாகமம், மு.சு.நூல். ப-ருச.

[1]மேலது ப-ருரு.

[1]மேலது ப-ருரு.

[1]மேலது ப-ருரு.

[1]செவ்வி. கைலாசநாதர்இந்திராகாந்தி, தானத்தார்பரம்பரை, ஆதிகோணேஸ்வரர்ஆலயம், தம்பலகாமம். திகதி-08.01.2023, பி.ப-2.08.